இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

# மகாகவி பாரதியார் கவிதைகள் புலப்படுத்தும் இசை மரபு



முனைவர் **சுகன்யா அரவிந்தன்**
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.

## முன்னுரை

மகாகவி பாரதியின் கவித்துவத்துக்கப்பால் இசைக்கலையிலும் சிறப்பான ஆளுமை கொண்டவர் என்பது இவருடைய கவிதைகளை வாசிக்கும் தோறும் புரிந்துகொள்ளமுடியும். இந்தப்புலமையினைப் பாரதி தன்னுடைய ஆர்வத்தினாலும், தான்வாழ்ந்த காலத்திலே இசைப்பணியாற்றிய ஆளுமைகளிடமிருந்தும் பெற்றுக்கொண்டார் என்பதை இவருடைய சரிதப்பதிவுகள் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. இன்றும் இசை நிகழ்ச்சிகளிலும் மரபுமாராத இசைக் கச்சேரிகளிலும் புரட்சிக்கவி பாரதி அவர்களுடைய பாடல்கள் அவையோர் நடுவிலே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி நிற்கின்றது என்றால் அதற்கு இவருடைய கவிதைகளின் இசைக் கோலங்களின் சிறப்பே என்று சொன்னால் மிகையில்லை. இத்தகைய இசைச்சிறப்பினைப் பாரதி அவர்கள் பெறுவாரையும் இவருடைய பாடல்களிலே இச்சிறப்புகள் புலப்படுகின்ற தன்மையினையும் இவ்வாய்வுக்கட்டுரை விரிவாக நோக்குகின்றது.

**திறவுச்சொற்கள்:** தமிழிசை மரபு, கீர்த்தனை, நாட்டார் இசை மரபு, பண்பாட்டு அலகு, பண்பாட்டு தொடர்ச்சி.

## தலைப்பு அறிமுகம்

இசைத்தமிழின் மாண்பினை அறிந்த பழந்தமிழர் இயல், இசை, நாடகம் எனும் மூன்று கூறுகளையும் கொண்ட முத்தமிழுள் இசையை நடுவில் வைத்துப் போற்றி மகிழ்ந்தனர். மிகத் தொன்மையான தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், இசை நூலை "நரம்பின் மறை" என்று குறிப்பிடுகிறது. இந்நூலுள் இசை பற்றிய பல குறிப்புகள் காணக்கிடக்கின்றன. சங்க நூலாகிய பரிபாடல், பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை போன்ற நூல்களிலே இசைத்தமிழ் பற்றி பல செய்திகள்

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

குறிப்பிடக் காண்கிறோம். சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ் காப்பியம். பின்வந்த பரஞ்சோதி முனிவரது திருவிளையாடற்புராணத்திலும் இசைக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

காலந்தோறும் தமிழிசை அரச ஒத்துழைப்புபெற்றுச் சிறந்தும், அவ்வப்போது நலிந்தும் வந்திருக்கின்றது என்பது வரலாறு சுட்டும் உண்மை.

இருபதாம் நூற்றாண்டளவிலே பல மொழிகளின் கலப்பும் தமிழிசை மரபிலே ஏற்பட, இசை நிகழ்ச்சிகளிலும் பெரும்பாலும் தெலுங்கு, வடமொழிப் பாடல்களே பாடப்பெற்றன. பொருள் விளங்காத காரணத்தால், பிறமொழிகளிலுள்ள பாடல்கள், தமிழ்மக்கள் உள்ளத்தைத் தொட இயலாதவையாகின. இக்குறையினைப் பல இயற்றமிழ் அறிஞரும் இசைத்தமிழ் வல்லுநர்களும் உணர்ந்திருந்தனர். இனிய இசையில் அமைக்கப்பெற்ற செந்தமிழ்ப்பாடல்களைத் தமிழ்மக்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. தமிழ் நாட்டில் தமிழிசை இயக்கத்தை 1941ஆம் ஆண்டு பெருங்கொடைவள்ளல் செட்டிநாட்டரசர் ராஜா சேர் அண்ணாமலைச்செட்டியார், இவர்தம் குமாரர் இராஜா சேர் முத்தையா செட்டியார் அவர்களும் தமிழிசை வளர்ச்சிப் பணியில் ஆர்வமும் ஊக்கமும் கொண்டிருந்தார்கள். இவர்களது சேவையில் வழி முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர், நீலகண்ட சிவன், வேதநாயகம் பிள்ளை, இலக்குமணப் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், பெரிய சாமித்தூரன், சுத்தாநந்த பாரதி ஆகியோர் இயற்றிய பாடல்களைச் சுரதாளக்குறிப்புகளுடன் நூல்களாக வெளியிட்டனர்.[1]

இவ்வாறான பின்புலத்திலேயே மகாகவி பாரதி அவர்களுடைய காலமும் அமைந்திருந்தது. இசைக்கு முக்கியத்தும் கொடுத்த பாரதி புரியும் வகையிலே பாடல்கள் அமைந்திருத்தல் தேவை என்னும் கருத்தியலிலேவிடாப்பிடியாக இருந்திருக்கின்றார்.

**பாரதியார் காலத்தில் தமிழிசை வளர்த்த ஆளுமைகள் - ஓர் பார்வை**

மகாகவி பாரதியார் அவர்கள் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்த இசைமேதைகளுடைய படைப்புகளிலே மிகவும் மனதைப் பறிகொடுத்திருந்தார். இசையிலேயே மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். இந்த மகான்களுடைய படைப்பியல் பண்புகளைப் பாரதி அவர்களுடைய கவிதைகளிலே இனம் கண்டுகொள்ள முடிகின்றது. அதுமாத்தரமல்லாமல் இவர்களுடைய பாதிப்புதான் பாரதி அவர்களை இசைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படைப்புகளைப் படைக்கவும் வழிப்படுத்தியது என்றால் மிகையில்லை.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

**மாயூரம்வேதநாயகம் பிள்ளை**

தமிழ்ப் பாடல்கள் மூலம் சமூகச் சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், பக்தி, ஒழுக்கம் ஆகியவற்றைப் பரப்பிய வித்தகர் இவர். 1856ஆம் காலங்களிலே தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியில் மாவட்ட முன்சீப் பதவியில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையிலே, அக்காலத்தில் தமிழில் கீர்த்தனைகளும் பாடல்களும் மிகக் குறைவாகவே இருந்தன. இறைவனைப் போற்றிப் பாடுவதற்கு எளிய நடையில் உள்ள பாடல்கள் மிக அரிதாகவே இருந்தன. அக்குறையைப் போக்க எண்ணி எல்லாச் சமயத்தினரும் இறைவனை இறைஞ்சிப்பாடும் வகையில் ஏறத்தாழ 200 கீர்த்தனைகளை இயற்றி, அந்நூலுக்கு "சரவ சமயச் சமரசக்கீர்த்தனை" என்று பெயரிட்டார்.

இவர் தம் பாடலுக்குத் தாமே இசையமைத்தார். நேரம் கிடைத்த போதெல்லாம் நீதி போதனையையும், உயர்ந்த கருத்துகளையும், உலக உண்மைகளையும் விளக்கும் பல செய்யுட்களை எழுதினார். அந்தப் பாடல்களில் சிறுவர் கடமை, பெண்களின் உணர்வு, குடிமக்கள் குணம், அரசன் இயல்பு ஆகியவை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இடைக்காலத்தில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டதை நினைந்து அவர்களது முன்னேற்றத்திற்காகப் பல பாடல்களை எழுதினார்.

இவை தவிரக் கிறிஸ்தவ, வேதக் கருத்துகளைக் கொண்ட "சத்தியத் தேக் கீர்த்தனைகள்" பலவும், மேலும் "திருவருள் மாலை", "திருவருள் அந்தாதி", "தேவ தோத்திர மாலை", "பெரிய நாசியம்மன் பதிகம்", "தயாபரக் கண்ணி" முதலிய பல நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவரது பாடல்கள் எல்லோருக்கும் புரிந்து கொள்ளும் வகையிலும், எளிய நடையிலும் அமைந்தது. தரத்தில் உயர்வும், அமைப்பில் அழகும் கொண்டு விளங்குவதால் அவை மக்கள் உள்ளத்தை எளிதில் தொடும் ஆற்றல் மிக்கவை. இவரது படைப்புகளையும் அவற்றின் சிறப்பையும் கண்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவரை "விற்பன்னர்" என்றும், "தன்னிகரில்லாத தமிழ் வேதநாயகர்"2 என்றும் புகழ்ந்துள்ளார்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**நீலகண்ட சிவன்**

கேட்போர் உள்ளத்தை உருக்கும் பக்திச் சுவை கொண்ட தமிழ்ப்பாடல்களை இயற்றித் தமிழிசையின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெரியார் நீலகண்ட சிவன் ஆவார். இயற்பெயர் சுப்ரமணியன் என்றிருந்த போதும், சிவனது திருவருள் பெற்று இறைவனது தொண்டிற்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட போது இவர் "நீலகண்ட சிவன்" என்று அழைக்கப் பெற்றார்.

திருவிளையாடல் புராணத்திலுள்ள சில வரலாறுகளையும், சிவனடியார் சிலருடைய வரலாறுகளையும் இவர் பாடல்களாகப் பாடியுள்ளார். நீலகண்ட சிவன், பெரும்பாலும் சிவபெருமானையே வாழ்த்திப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். எனினும் விநாயகர், முருகன், கலைவாணி, அம்பிகை, திருமால் போன்ற கடவுளர்கள் மீதும் சில பாடல்களைப் பாடியுள்ளார்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட பல பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இக்கால வழக்கிலுள்ள காம்போதி, சங்கராபரணம் போன்ற பண்களில் மட்டுமல்லாமல், த்விஜாவந்தி, அமீர்கல்யாணி, யமுனாகல்யாணி போன்ற ஹிந்துஸ்தானி இசைமரபிலே வந்த பண்களிலும் இவர் பாடல்கள் இயற்றியுள்ளார். மங்களகைசிகி போன்ற ஒரு சில அரிதுபண்களிலும் இவர் பாடல்கள் அமைத்துள்ளார். ஆதி, ரூபகம், சாபு போன்ற வழக்கிலுள்ள தாளங்களையே இவர் கையாண்டுள்ளார். சிவபெருமானது தாண்டவத்தைச் சித்தரிக்கும் பாடல்களில் இவர் தந்தோம், தரிகிடதோம் போன்ற தாளச் சொற்கட்டுகளை நன்கு பயன்படுத்தியுள்ளார். "என்றைக்குச் சிவக்ருபை வருமோ", "சம்போ மஹாதேவா", "ஆனந்த நடமாடுவார் தில்லை"3 என்று தொடங்கும் பாடல்கள் இசைக் கலைஞர்களால் விரும்பிப் பாடப்படுகின்றன.

**கோபாலகிருஷ்ண பாரதியார்**

பக்திச்சுவை ததும்பும் நந்தனார் வரலாறுகீர்த்தனைகளை இயற்றித் தமிழிசை தழைத்தோங்க அரிய பணியாற்றியவர் கோபாலகிருஷ்ண பாரதியார். இவருடைய கீர்த்தனைகளின் வர்ண மெட்டுகள் இனிமையாகவும் யாவரும் கற்றுக்கொள்ளக் கூடிய வகையில் எளிய முறையிலும் அமைந்துள்ளன.

தாயுமானவர் பாடல்களை விருப்புடன் படித்து வந்தார். கீர்த்தனை அமைப்பினை அறிந்து கொண்டு தாமே பல கீர்த்தனைகளை இயற்றத் தொடங்கினார். பல சங்கீதவித்துவான்களின் வேண்டுகோளுக்கு இணங்க "நந்தனார்

சரித்திரத்தை" இயற்றினார். இது முழுவதும் கீர்த்தனை வடிவிலேயே பாடப்பட்டிருந்தது.

நந்தனார் சரித்திரம் இவரது இசை ஞானத்தையும், கற்பனைத் திறத்தையும், பாடல் இயற்றும் ஆற்றலையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

கோபாலகிருஷ்ண பாரதியார், நந்தனார் சரித்திரம் மட்டுமல்லாமல் இயற்கை நாயனார் சரித்திரம், திருநீலகண்டநாயனார் சரித்திரம் ஆகிய சரித்திரங்களைப் பாடல் வடிவில் இயற்றியதோடல்லாமல், பல தனிக்கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

கோபாலகிருஷ்ண பாரதியார் இன்சுவை மிகுந்த பல பக்தி இராகங்களையே நந்தனார் கீர்த்தனைகளில் பயன்படுத்தியுள்ளார். சங்கராபரணம், பந்துவராளி, கல்யாணி, தோடி, சரசாங்கி, சக்கரவாகம் போன்ற மேளகர்த்தா இராகங்களிலும், மோகனம், நாட்டை, எதுகுலகாம்போதி, நீலம்பாரி, நாதநாமக்ரியா, மாஞ்சி, சாமா, செஞ்சுருட்டி, சௌராஷ்ரம், பைரவி, ஸ்ரீராகம், ஸஹானா, வசந்தா, புன்னாகவராளி, சாவேரி, காம்பேரி, அசாவேரி போன்ற கிளை இராகங்களிலும் ஹிந்துஸ்தானி இசையில் தாக்கம் பெற்ற பெஹாக், அமீர், கல்யாணி, யமுனாகல்யாணி ஹிந்துஸ்தான் காபி போன்ற இராகங்களிலும் பாடல்கள் இயற்றியுள்ளார். கிளை இராகங்களில் செஞ்சுருட்டி, அசாவேரி, புன்னாகவராளி, நாதநாமக்ரியா, சௌராஷ்ரம் ஆகிய இராகங்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

பாரதியார், 'ஆதி, ரூபகம், சாபு ஆகிய தாளங்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். ஒரு சில பாடல்களே ஜம்பை,'4 அடி தாளங்களில் அமைத்துள்ளார்.

### இராமசுவாமி சிவன்

தமிழ் நாடகக் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றித் தமிழிசைக்கு வளம் சேர்த்த இயலிசைப் புலவர் இராமசுவாமி சிவன். இவர் சற்குரு ஸ்ரீதியாராஜருடைய சீடமரபிலே வளர்ந்தவர். இவரும் சிறு வயதிலேயே பல பாடல்கள் இயற்றிப் பாடிவந்தார். கந்தபுராணத்தைக் கீர்த்தனை வடிவில் இயற்றிக் கற்றறிந்த அவையோர் முன்னிலையில் அரங்கேற்றினார்.

கதாகாலேட்சபம் செய்யும் கலைஞர்களுக்குப் பயன்படும் வகையில் மார்க்கண்டேய சரித்திரம், பிரகலாத சரித்திரம், சீதாகல்யாணம் போன்ற சரித்திரங்களைக் கீர்த்தனை வடிவில் அமைத்தார்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

சிவபெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்டு சிவகதைகளைக் காலேட்சபமாக அவர் நிகழ்த்தி வந்ததால் “சிவன்”5 எனப் பெயர் பெற்றார்.

**கவிக்குஞ்சர பாரதி**

கவிக்குஞ்சர பாரதி தாம் இயற்றிய “அழகர் குறவஞ்சி” இசை நாட்டிய நாடகத்தில் பல அழகிய பதங்களை அமைத்துள்ளார்.

இவர் இயற்றிய பதங்கள் சொல்லழகும் பொருளழகும் கொண்டு விளங்குகின்றன. இவருடைய பதங்களில் பல உவமைகளும் பழமொழிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவர் சோலைமலை அழகர் மீது ஒரு “குறவஞ்சியும்”, திருமுருகனின் அவதாரத்தை விளக்கும் “ஸ்ரீ கந்தபுராணக் கீர்த்தனை”யும், “கயற்கண்ணிமாலை”யும் திருப்பதி வெங்கடாசலபதி மீது “திருவேங்கடமாலையும்”, “திருமுருகவிலாசம்” மற்றும் “பேரின்பக் கீர்த்தனைகள்”6 என்ற நூலும், இன்னும் பல பாசுரங்களும், கீர்த்தனைகளும், பதங்களும் பாடிச் செவ்விய முறையில் தம் வாழ்நாளைச் செலவிட்டு வந்தார்.

**வள்ளலார்**

இக்காலப்பகுதியில் தமிழிசை இயக்கத்துக்கு அடிகோலியவர்களுள் முக்கியமானவர் இவர் என்றால் மிகையாகாது. இசையியலில், அதன் நுணுக்கங்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்.

கீர்த்தனை கீழ்நிலையிலான சுவைகளைத் தரவே பயன்படும் என்ற கருத்து முறியடித்து இசை உலகிற்கு அறிவூட்டியவர் உயர்ந்த மதத் தத்துவங்களையும், ஆன்மநேயம், ஒருமைப்பாடு போன்ற சீரிய கருத்துகளையும் கீர்த்தனைகளில் தந்து வெற்றி பெற்றவர். இசைப்பாக்களில் இயற்பாச் சிறப்பும் இருக்க முடியும் என்று காட்டியவர் இவர்.

நாமாளிகள் போன்ற பாடல் வகைகள் கீர்த்தனைவடிவு அல்லாவாயினும் இசைப்பாடல் என்ற முறையில் கீர்த்தனைப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

இவர் ‘கும்மிப் பாடலைக் கீர்த்தனைவடியில் அமைத்தளித்தது புதுமையே. இவரது பாடலமைப்புக்களது தாக்கங்கள் பல பாரதியாரின் பாடல்களிலும்’7 காணமுடிகிறது.

இ -ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

**இராமலிங்க சுவாமிகள்**

இராமலிங்க சுவாமிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருவருட்பாக்களை அருளிச்செய்ததோடல்லாமல் நூற்றுக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். தனிப்பாடல்களில் சில "பதங்களும்" உள்ளன.

1865ஆம் ஆண்டு அவரடி சமரசச் சன்மார்க்கத்தில் சங்கத்தை ஏற்படுத்தினார். இவருடைய பாடல்கள் கருத்தாழமும் எதுகை, மோனை நயங்களும் கொண்டு விளங்குகின்றன.

இவரது பதங்கள் தில்லை அம்பலத்தானை தலைவனாகவும் அவரை நினைத்துருகும் தலைவி பாடுவதாகவும் அமைந்திருப்பது. இறைவனை உறவு நிலையில் வைத்துப் பாடும் மரபுமுறைக்குச் சிறந்த உதாரணமாகும்.8

**அண்ணாமலை ரெட்டியார்**

காவடிச்சிந்தின் தந்தை என்று அழைக்கப்படுவதற்குத் தகுதி படைத்த அண்ணாமலை ரெட்டியார்.

ஜமீந்தார், கழுகுமலைக்கு காவடி எடுத்த போது அவருக்காக அண்ணாமலை ரெட்டியாரால் பாடப்பட்டவைகளே காவடிச் சிந்து ஆகும்.

செய்யுள் நயச்சிறப்போடு பாடல்கள் அழகிய மெட்டுகளைக் கொண்டவைகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹரிகாம்போதி, கரகரப்ரியா, நடபைரவி, சக்கரவாகம், முகாரி, ஆனந்தபைரவி, செஞ்சுருட்டி முதலிய ராகங்கள் கையாளப்பட்டுள்ளன. ஆதிதாளம் மட்டுமன்றி மிஸ்ரசாபு, கண்டலகு, திஸ்ரலகு, ஏகம், ரூபகம் முதலிய தாள வகைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. "முடுகு" என்ற விரைவாகப் பாடப்படும் பகுதியும் காவடிச்சிந்தின் ஒரு விசேட அம்சமாகும்.

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தில் மிகவும் பற்று கொண்டிருக்க மகாகவி சுப்பிரமணியப் பாரதியார், தானும் சில காவடிச்சிந்துகளை இயற்றியுள்ளார். அண்ணாமலை ரெட்டியார் "வீரை தலபுராணம்", "வீரைநவநீத கிருஷ்ணசாமி பதிகம்", "கோமதிஅந்தாதி" போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

இவ்வாறான சங்கீத மேதைகள் மட்டுமல்ல ஆபிரகாம் பண்டிதர், நகரம் முத்துசாமி கவிராயர், செவற்குளம் கந்தசாமிப் புலவர், துரைசாமிக் கவிராயர், சின்னசாமி சாஸ்திரி, அச்சுதாநந்த சுவாமி, நாமக்கல் கவிஞர், வெ.இராமலிங்கம் பிள்ளை போன்ற பல இசைமேதைகள் வாழ்ந்து இசைவளர்த்த காலத்திலே மகாகவி

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

பாரதியார் அவர்களும் வாழ்ந்திருக்கின்றார். இவ்வாறான சூழலிலே வாழ்ந்தவர் என்கின்ற வகையிலே பாரதியார் அவர்களுடைய படைப்புகளிலே இவர்களது படைப்புகளின் தாக்கம் நிறையவே இருந்திருக்கலாம்.9

**மகாகவி பாரதியாரின் இசைமரபு**

பாரதியாரின் இசை என்பது மிக ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. சங்கீத மும்மூர்த்திகள் இசையின் மீது கொண்டிருந்த பக்தி, அதைக் கையாள்வதில் காட்டிய சிரத்தை, இவைகளைப் போலவே மகாகவி பெருத்த அபிமானமும் வைத்திருந்தார். அவர் ஒரு சிறந்த இசைப்பாடலாசிரியன் என்பது பலருக்கு இன்னமும் தெரியாது. விநாயகர் நான்மணிமாலையில் பாரதி கூறுவார்.

**"போற்றி கல்யாணி புதல்வனே பாட்டினிலே**
**ஆற்றலருளியடியேனைத் - தேற்றமுடன்**
**வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய் வாணியருள்**
**வீணையொலிஎன்னாவில் உண்டு"**

இதேபோலக் கலைவாணியின் அருள் பார்வை பாரதிக்கு நிறையவே கிடைத்திருக்கிறது. அவருக்குப் பொன்போலக் குரல், புதுமின் போல் வார்த்தைகள் அமைந்திருக்கின்றன. அவரது பாடல்கள் பலவற்றை அவரிடமே பாடிக்கேட்பது மகா இன்பம்.

**"பாட்டுத்திறத்தாலே - இவ்வையகத்தை**
**பாலிடத்திட– வேண்டும்"**

இந்தப் பாரதியாரின் வாக்கு இன்று உண்மையாகி விட்டது. உலகமே பாரதியின் கவிதைகளை வியந்து போற்றுகிறது.

கவிதையும், அதுவும் இசையுடன் கூடிய பாட்டுத்திறன் வந்துவிட்டாலே அவர்கள் பூமியிலே யாருக்கும் அடிமை செய்வதில்லை. இது சற்குரு ஸ்ரீதியாகராஜர் போன்ற மகான்கள் கண்டு அனுபவித்த உண்மை.

கி.பி 1898இல் மகாகவி பாரதி அவர்கள் காசியில் இருந்தபோது ஹிந்துஸ்தானி இசையிலும் பயிற்சி பெற்றிருக்கிறார். புதுவையில் இருந்த போது இசையைப் பயின்றிருக்கிறார். இவ்வாறான அனுபவங்களின் மூலம் பெற்ற அனுபவங்களை நிலைநிறுத்தும் வண்ணம் அந்தந்த இராகங்களில் தாளங்களில் என்றும் நிலைத்திருக்கும் இசைப் பாடல்களை நமக்குத் தந்திருக்கின்றார்.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

பாரதி தன் குயில்பாட்டிலேயே இசையின் பெருமைகளை இருவரிகளிலே மிக அழகாகப் புதிய உக்திகளுடன் கூறியிருக்கிறார்.

காதல் இங்கு முக்கியம் பெற்றாலும் இசையைப் பற்றிய குறிப்பும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**'நாதம்நாதம்நாதம்**
**நாதத்தேயோர் நலிவுண்டாயின்**
**சேதம், சேதம், சேதம்**
**தாளம் தாளம் தாளம்**
**தாளத்துக்கோர் தடையுண்டாயின்,**
**கூளம், கூளம், கூளம்**
**பண்ணே, பண்ணே, பண்ணே**
**பண்ணிற்கேயோர் பழுதுண்டாயின்**
**மண்ணே, மண்ணே, மண்ணே"**

என்ற அற்பதமாகத் தொடங்குகிறார். குயிலின் இரண்டாவது பாடலிலேயே பாரதியார் குறித்துள்ள சுரக்குறிப்புக்களையும் காணலாம்.

இராகம் - சங்கராபரணம் ஏகதாளம்

ஸ்வரம்

**"ஸகா– ரிமா – காரீ**
**பாபா பாபா – மாமா மாமா**
**ரீ கா –ரீகமா– மாமா"** 10

சந்தப் பேதங்களுக்குத் தக்கபடி மாற்றிக் கொள்க என்று தெளிவாகவே கூறுகிறார்.

நீரையும் நெருப்பையும் காற்றையும் ஞாலத்தையும் வானையும் காலத்தையும் படைத்த படைப்புக் கடவுளை விழித்துப் பாரதியார் கூறுகிறார்.

**"சால மிகப் பெரிய சாதனை காண் இதெல்லாம்**
**ஓசைதருமின்பம் உவமையிலா இன்பமன்றோ?"** என்று வியந்து பாடுகிறார்.

மேலும் 'இறைவா! நீ எத்தனையோ சிருஷ்டிகளைச் செய்தாலும் உந்தன் அதிசயங்கள் தன்னுள்ளே கானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!' என்று வியந்த பாடுகிறார்.

இ -ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

**“காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தான றியும்**

**பாட்டின் சுவையதனைப்பாம் பறியும்”**

என்றே கூறுகிறார். இசை மரபின் நாதப்பிரிப்புக்களாகிய அனாகதநாதம், ஆகதநாதம் என்கின்ற பிரவுகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

ஆஹதம், அனாஹதம் ஆகிய நாதங்கள் இசையின் அடிப்படையாக அமைவது. ‘ஆஹதம்’ என்பது அனைவராலும் உணர்ந்து கொள்ளக் கூடிய ஒலி. இயல்பாகவே எழுப்பப்படுவது. ‘அனாஹதம்’ என்பது அனுபவத்தால் மாத்திரமே உணரக்கூடிய ஒலி. இது யோகிகள் ஞானிகளால் மாத்திரமே உணரக் கூடியது. பாரதியாரும் உணர்ந்திருந்தார் என்று இவருடைய படைப்புகளின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. ஆதலினால் தான் இறைவன் படைப்பனைத்தும் இசையின் பரந்த நிறைவாகக் கண்டவர்.

மனிதன் தோற்றுவிக்கும் இசையும், இசைப் பயிற்சியில்லாத மக்களின் இசை, முறையாகப் பயின்றவர் குரலாலும், விரலாலும் உண்டாக்கும் இசை என இருவகைப்படும். இசையின் இத்தனை பகுதிகளையும் ஒருங்கே இணைத்துப் பாரதியின் குயில் பாடுகிறது.

**“கானப்பறவைகலகலவெனும் ஓசையிலும்**

**பாட்டினிலும் நெஞ்சைப்பறி கொடுத்தேன்”** என்று பாடுகிறார்.

வேதங்களில் இவருக்கு இருந்த ஆழ்ந்த ஞானமும், காளிதாசன் கவிதைகளில் ஊறித்திளைத்ததாலும் பாரதியின் கவிதை மிகமிக ஆழமாக, அழகாகப் பல அடிப்படை உண்மைகளைக் கலாரசனையுடன் தருகின்றது. இசைத்தந்தி புதிய கருவி ஒன்றை மகாகவி காண்கின்றான்.

**“மழை இனிமையாகப் பெய்கிறது!**

**மழை பாடுகின்றது**

**அது பலகோடி தந்திகளையுடையதோர் இசைக்கருவி.”**

பாரதியின் கையில் அடைக்கலமடைந்த இந்த மழை என்ற இசைக்கருவிக்குத் தாளமாக இடிகளை இணைக்கின்றார். இந்தப் பிரமாண்டமான இசைக் கருவிகளைத் துணையாகக் கொண்டு பாடப் பாரதி போன்ற இசைக் கலைஞர்களால்தான் முடியும்.

பாரதியினைத் தமிழிசைக் களஞ்சியம் என்றே குறிப்பிட முடியும். கும்மி, தெம்மாங்கு, சிந்து, நொண்டிச் சிந்து, காவடிச்சிந்து, கிளிக்கண்ணி, பள்ளு, பண்டாரப் பாட்டு இப்படிப்பல்வேறு இசைவகைகளைக் கையாண்டுள்ளார். கோபால கிருஷ்ணப்

பாரதியார், தாயுமானவர் இவர்களது இசை வகைகளுடன் தேவாரத் திருவாசகமும், திவ்வியப் பிரபந்தங்கள் அனைத்து இசை வகைகளையும் தனது புதிய கவிதைப் படைப்புக்குத் துணையாகக் கொண்டு, தனக்கென ஒரு பாதையை வகுத்துக்கொண்டு பாடல்களைப் பாடியுள்ளார். பலரது இசை மரபுகளை உள்வாங்கி அதிலிருந்து ஒரு புதிய மரபைத் தமிழிசை உலகிற்குத் தந்த பெருமை மகாகவி பாரதிக்கு உண்டு.

இந்தப் பாடல் வகைகள் பற்றி பாரதி கொண்டிருந்த விளக்கங்களும் அதாவது இலட்சணங்களும், இவை பாரதியின் கவிதைகளிலே பெற்றுள்ள இடங்கள் பற்றியும் சற்று விரிவாக நோக்குவோம்.

**கும்மி**

கும்மிப்பாடல்கள், கேரளத்திலே 'கை கொட்டிக்களி' என்று குறிப்பிடப்படுவதாகப் பாரதி தன்னுடைய தனிக்கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார். கும்மி என்பது 'கை கொட்டி ஆடுதல்' என்று பொருள்படும். ஆனந்தப்பைரவி, ஹுசேனி போன்ற இராகங்களில் இருந்தே இவை பிறந்தவையாகக் குறிப்பிடப்படுகிறது.

**தெம்மாங்கு**

இதை வண்டிக்காரன் பாட்டு என்று சாதாரண மக்கள் கூறுவார்கள். இரவில் நெடுஞ்சாலையில் வண்டி ஒட்டிச்செல்கையில் வண்டிக்காரன் வாய்விட்டுப்பாடும் பாடல் தெம்மாங்கு எனப்படுகிறது.

**"மானாமதுரையிலே மருக்கொழுந்து**
**கூடைக்காரி**
**எருதமலைதனிலே",**

போன்றவையே பழைய தெம்மாங்குப் பாடல்.

**"காட்டு வழி தனிலே – அண்ணே**
**கள்ளர் பயமிருந்தால் - எங்கள்**
**வீட்டுக் குலத் தெய்வம் - தம்பி**
**வீரம்மை காக்குமடா!"**

என்று தொடங்கும் பாரதியார் பாடல் இவ்வகையைச் சாரும்.

இ -ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

**சிந்து**

பழந்தமிழ் நாட்டின் ஒன்பது வகையான இசை வடிவங்களில் இது ஒன்றாகும். பஞ்சமரபு என்னும் இசை நூல் இதனைக் குறிக்கப்படுகின்றது.

"**செம்பரி சிந்து திரிவதைச் சீர்ச்சவலை**
**தப்பொன்னுமில்லாசமபாத – மெய்படியும்**
**செந்துறைவெண்குறைதேவபாவணிவண்ணமென்ப**
**பைந்தொடியாய் இன்னிசையின் பா**"

பாஞ்சாலி சபதத்தில் பலவகைச் சிந்துமெட்டுகளைப் பயன்படுத்தியுள்ளார்.

"**மாயச் சூதினுக்கே – ஐயன்**
**மனமினங்கி விட்டான்**"

என்று தொடங்கும் பாட்டு 183 முதல் 195வரிகள் நிறைவடைய,

"**தானத் தானனானானானா**
**தானத் தானனானா**" என்ற மெட்டுள்ள சிந்துக்கள்.

**நொண்டிச்சிந்து**

பழைய நொண்டி நாடகங்களில் வர்ணனைக்கும், வரலாற்றைக் கூறவும் பயன்படுத்தப்பட்டு வந்த பாடல் வகை இது. கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் அதன் கதைச்சுருக்கம் நொண்டிச்சிந்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலும் பதினெட்டுப் பாடல்கள் நொண்டிச்சிந்து மெட்டிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

"**தானனதானன தா – ன**
**தானனதானன தான னானா**
**தானனதானன தான னானா**"

என்ற மெட்டில் நடப்பது என்பது பாரதியாரின் குறிப்பு.

"**எங்ஙனம் சென்றிருந்தீர் - என**
**நின்னுயிரேயென்றன் இசையமுதே**"

என்று ஆரம்பிக்கும் சரஸ்வதி தோத்திரம்.

"**உண்ண உண்ணத் தெவிட்டாதே – அம்மை**
**உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்**"

என்று தொடங்கும் கண்ணனைத் தாய் உறவு நிலையிலே வைத்துப்பாடும் 'கண்ணன் - என்தாய்' என்ற பாடல்.

**“நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த**
**நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்”**

என்று பாரத ஜனங்களின் மனநிலையை எண்ணி மனம் நொந்து பாடிய பாடல்.

**“பூமிக்கென்ன யனுப்பினான் அந்தப்**
**புதமண்டலத்திலென்நம்பிகளுண்டு”**

என்று கண்ணனைத் தந்தை உறவிலே வைத்துப்பாடிய ‘கண்ணன் - என் தந்தை’ என்ற பாடல். இவையும் நொண்டிச்சிந்து மெட்டிலேயே பாடப்பட்டிருக்கின்றன.

**காவடிச்சிந்து**

முருகன் கோவிலுக்கு நேர்த்திக்கடன் செலுத்தச் செல்வோர் காவடி எடுத்து ஆடிச் செல்கையில் பாடுகின்ற பாட்டுவகை. இது பற்றி அறியாதவர் எவருமில்லை. பாரதியார் சிறு பிராயத்திலேயே காவடிச்சிந்து மெட்டில் பாடல்களை இயற்றிப் புலவர்களின் பாராட்டுகளைப் பெற்றவர்.

**“வில்லினை யொத்த புருவம் வளைத்தனை**
**வேலவா! – அங்கோர்**
**வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி**
**யானது வேலவா!”** (இராகம்: புன்னகவராளி: தாளம்:- திஸ்ரம்)

என்ற பாடல் காவடிச்சிந்து வகையைச் சேர்ந்தது. இதனைச் சார்ந்து பாரதியாருடைய,

**“தொன்று நிகழ்ந்த தனைந்து முணர்ந்திடு**
**சூழ்கலைவாணர்களும் - இவள்**
**என்று பிறந்தவளென்றுணராத**
**இயல்பினளாமெங்கள் தாய்”** என்ற பாடல் அமைந்திருக்கக் காணலாம்.

**கிளிக்கண்ணி**

கிளியை விளித்துப் பாடுவதாக உள்ள இப்பாடல் மாண்டு இராகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

**“திருவைப் பணிந்து நித்தம் செம்மைத் தொழில் புரிந்து**
**வருகை வருவதென்றே – கிளியே மகிழ்வுற்றிருப்போமடீ”**

என்ற பாடலில் பாரதியார் மாண்டு இராகத்தின் பெயரையே இணைத்துப் பாடியிருக்கும் சிறப்பினையும் காணமுடிகின்றது.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581-9712

**“ஞாயிற்றை எண்ணி என்றும் நடுமை நிலை பயின்று**

**ஆயிர மாண்டு வுலகில் - கிளியே**

**அழிவின்றி வாழ்வோமடீ”**

என்பது அந்தப் பாடலாகும்.

**“நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி**

**வஞ்சனை செய்வாரடீ– கிளியே**

**வாய்ச்சொல்லில் வீரரடி”**

என்று தொடங்கும் பாடலும் கிளிக்கண்ணி மெட்டில் அமைந்ததே.

**பள்ளு**

**“ஆடுவோமே பள்ளு பாடுவோமே**

**ஆனந்தச் சுதந்திரம் அடந்துவிட்டோ மென்று”**

என்ற பாடல் ‘வராளி இராகத்தில் அமைந்தது. பள்ளர் களியாட்டத்தைக் குறிக்கும் சுதந்திரப் பள்ளுப் பாடலாகிய ‘வீரச் சுதந்திரம்’ என்ற பாடலும் இவ்வகையைச் சேர்ந்ததே.

**நந்தனார் சரித்திரப் பாடல்களும், பாரதியார் பாடல்களும்**

கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் பாரதியாருக்கு அளவற்ற மதிப்பு உண்டு. தம் தேசியக் கீதங்கள் பலவற்றிற்கு நந்தனார் சரித்திரக்கீர்த்தனை மெட்டுகளையே கையாண்டிருக்கின்றார் பாரதியார்.

**கீர்த்தனை**

நாட்டைக்குறிஞ்சி, சக்கரவாகம் போன்ற இராகங்களிலே அமைந்த இசைப்பாடல்கள். இந்த இராகங்களில் பாரதியாரே படைத்த இவ்விசை வடிவங்கள் அவரது இசைப்பாடல் இயற்றும் திறனைப் பெரிதும் விளக்குவன கொள்ள முடிகின்றது.

**“முருகா, முருகா, முருகா,”** – நாட்டைக்குறிஞ்சி

**“காலா உன்சைச்சிறு புல்லென”** – சக்கரவாகம்.

இவை தவிர வட மொழியிலும் பாடல் இயற்றக் கூடிய தேர்ச்சி, அதாவது புலமை பாரதிக்கு இருந்திருக்கின்றது. இதற்கு,

**“பூலோகக் குமாரி – ஹே**

**அம்ருத நாரி”**

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

என்ற பாடலும்,

**“உஜ்ஜயினி, நித்யகல்யாணி”**

என்று தொடங்கும் நவரத்திரிப் பாடலும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**பாரதியார் கொடுத்துள்ள சுரக்குறிப்புக்கள்**

அனேகமான பாடல்களுக்குப் பாரதியாரே சுரக்குறிப்புக்கள் எழுதி இசை மெட்டினை வரையறை செய்துள்ளார்.

‘சின்னஞ்சிறு கிளியே’ என்ற பாடலுக்கு இவரால் அமைத்துக் கொடுத்துள்ள சுரக்குறிப்பு வருமாறு,

இராகம்:- பைரவி  தாளம்:- ரூபகம்

**“ஸஸஸ - ஸாஸா–பபப**

**தநீத–பதப– பா**

**பபப–பதப–பமா–கரிஸ**

**ரிகம–ரிகரி - ஸா”**

இவ்வாறு ‘நொண்டிச்சிந்து’ சக்கரவாகம் எனப்படுகின்ற இராகத்திலும், ‘நின்னைச் சில வரங்கள் கேட்பேன்’ என்ற பாடலுக்குத் தோடியிலும், ‘காக்கை சிறகினிலே’ என்ற பாடலுக்கு யதுகுலகாம் போதியிலும், சுரக்குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றன.11

**பாரதியார் பயன்படுத்திய சந்தக்குறிப்புகள்**

திருப்புகழ் பாடல்களுக்குச் சந்தக் குறிப்புகள் உள்ளது போலவே பாரதியாரும் தனது பாடல்களுக்குச் சந்தங்களைக் குறித்துள்ளார். அவற்றுள் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு,

**“முன்னையிலங்கை அரக்கர் அழிய**

**முடித்தவிலயாருடைவில்?”** என்ற பாடலுக்கு,

**“தானதன தந்தன தானத் தனந்தன**

**தானனத்தானானே”** என்றவாறு சந்தம் வகுத்துள்ளார்.

**“வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி“** என்ற பாடலுக்கு

**“தானத் தனந்தன தானத் தனந்தன**

**தானத் தந்தான”** என்ற வகையிலே சந்தம் அமைந்துள்ளார்.

மற்றும், அயல்நாட்டு இசை மரபுகளையும் எமக்கேற்றவாறு மாற்றியமைத்து எமது இசையோடினைத்து பாடல்களுக்கு மெட்டிசைத்திருக்கிறார்.

இ -ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

'விடுதலை' என்ற பாடலைப் பிலஹரிஇராகத்தில் அமைத்து மேனாட்டு இசை போல் ஒலிக்கும்படி இயற்றியவர் பாரதியார் அப்பாடலின் சுரதாளக் குறிப்பு வருமாறு,

இராகம்:- பிலஹரி

தாளம்:- ஆதி (திஸ்ர நடை)

பல்லவி

**கபகபா, கதபதா, ததசா,**

**விடுதலை விடுதலை விடுதலை**

சரணம்

**பாபபாபபபபாப, பபபநீத, பாபபா**

**மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைமைக் கொளுத்துவோம்**

**பாபபமம மாம மாம, ககமஸாரி, காப பா,**

**வைய வாழ்வு தன்னிலந்த வகையிலும் நமக்குள்ளே**

**காகப் பாகத் தததஸாஸ், ஸ்ரிஸ்ஸா, ஸாஸாஸ்ரி.**

**தாதரென்றநிலைமைமாறி ஆண்டுகளொடு பெண்களும்**

**தகரி காதா ஸாரிஸாரி, ஸாரி தாப, காபஸ்ரி,**

**சரிநிகர்ச மான மாகவாழ்வமிந்த நாட்டில்**

**கபக பா, தஸ்ஸ தா,**

**விடுதலை** …………… **விடுதலை** …………….

**தக்ரிக்ரி**………

**விடுதலை** ……… 12

இந்த வகையிலே பாரதியின் இசை ஆளுமையை பார்க்கும் போது கவிதை எழுதுவது மட்டுமன்றி அதற்குரிய சந்தர்ப்பம், உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றை அறிந்து அதற்கேற்ற இராகங்களையும் சந்தர்ப்பங்களையும் தேர்ந்தெடுத்து மெட்டமைத்தல் என்பது இலேசான செயலல்ல.

இது மட்டுமல்ல தான் கற்றவற்றை அப்படியே உள்வாங்கி அவற்றைப் பொருத்தமான இடத்திலே பயன்படுத்துதல் என்பதும் திறம்பட இவரால் செயற்படுத்தப்பட்டுள்ளமை இவரது பாடல்களிலிருந்து புலப்படுகிறது.

**முடிவுரை**

இந்த வகையிலே பாரதியாருடைய கவிதைகள் பார்க்கும் கோணங்கள் தோறும் வேறுபட்ட அளவுகளைக்கொண்டு பரிமளிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

இதற்குக் கவியினுடைய ஆற்றலும் ஆழ்புலமையும், இசைமீது கொண்டிருந்த ஆறாக்காதலுமே காரணங்களாகின்றன.

மிகக்காத்திரமான இசை பயின்றுவந்த காலத்திலே வாழ்ந்த மகாகவி பாரதியார் தன்னுடைய கவிகளின் இலகுவான இயல்பான நிலைக்குத் தமிழிசை என்கின்ற ஆற்றின் போக்கினைத் திசை திருப்பினார் என்றால் மிகையில்லை. இது இசை என்கின்ற மாபெரும் கலையினை எவரும் உணர்ந்து, இரசித்து, மகிழ்ந்திருக்க வழிவகுத்தது.

**அடிக்குறிப்புகள்**

1. செல்லத்துரை.பி.டி., (1995), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், பக் : 56.
2. மீனாட்சி சுந்தரம்பிள்ளை: (1996): மாயூரப்புராணம், மதுரை, பக் : 36.
3. செல்லத்துரை.பி.டி., (1995), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், பக் : 56.
4. அருணாசலம்.மு. (2009) தமிழ் இசை இலக்கிய வரலாறு: மதுரை : பக் : 67.
5. செல்லத்துரை.பி.டி.,(1995), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், பக் : 56.
6. மேலது : பக் :76
7. மேலது : பக் :82
8. மேலது : பக் :96
9. மேலது : பக் 35
10. ராமாநுஜதாசன்: 1985: பாரதியார் பாடல்கள் (இசைக் குறியீடுகளுடன்) பயனீர் பதிப்பகம், சென்னை : பக் : 46
11. மேலது : பக் 65
12. மேலது : பக் :82

**துணைநின்ற நூல்கள்**

1. மகாகவி பாரதியார் 1992, பாரதியார் கவிதைகள்: விஜயா பதிப்பகம்: சென்னை.

2. மகாகவி பாரதியார், 1992, மகாகவி பாரதியார் கவிதைகள்: ஸ்ரீ இந்து பப்ளிகேசன்ஸ், தியாகராய நகர், சென்னை.

இ-ஐ.எஸ்.எஸ்.என் : 2581 - 9712

3. சிவபாலன்.கே: 1999: தமிழிசை மரபு: இசைக்கோணில், இசைமரபு பயிற்சிக்கூடம், அடையாறு, சென்னை.

4. பாலச்சந்திரராஜீ. ஸ்ரீ. ஏஸ்.1990: ராகபாவர்த்தம்: நர்மதா பதிப்பகம், சென்னை.

5. சோமசுந்தராம். சி.எஸ்.எஸ்.: 1998: இசை மேதைகள், உலகத்தமிழ் பண்பாட்டுக்கழகப் பதிப்பகம், சென்னை.

6. கோவேந்தன், த: 1985: பாரதி களஞ்சியம்: நர்மதா பதிப்பகம், சென்னை.

7. பாரதியார் கட்டுரைகள்: 1988: பூம்புகார் பதிப்பகம், சென்னை.

8. சுத்தானந்தபாரதியார்: 1998: கவிக்குயில் பாரதியார்: திருநெல்வேலி தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிட்டெட், சென்னை.

9. ராமாநுஜதாசன்: 1985: பாரதியார் பாடல்கள் (இசைக் குறியீடுகளுடன்) பயனீர் பதிப்பகம், சென்னை.

10. செல்லத்துரை.பி.டி., (1995), தென்னக இசையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.

11. மீனாட்சி சுந்தரம்பிள்ளை: (1996): மாயூரப்புராணம், மதுரை.

12. அருணாசலம்.மு. (2009) தமிழ் இசை இலக்கிய வரலாறு: மதுரை.

13. சுந்தரம் வீ.ப.கா: (1992): தமிழிசைக் கலைக்களஞ்சியம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.